ஸ்ரீ

வரவரமுனியே நம:

பரமபாகவதரிலொருவர்,

சாதித்தருளிய

# திருநாமப்பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீ வ ர வ ர மு நி யே ந ம :.

# நித்தியாநுசந்தானம்.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம்-தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்-வந்தோம்யஜாமாதரம்முநிம்
லக்ஷ்மீநாதஸ்மாரம்பாம்-நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்
யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹ தஸ்ததிதராத்ருணாயமேனே
அஸ்மதகுரோர்பகவதோஸ்யதயைகஸிந்தோ
ராமாநுஜயசரணௌ சரணம்ப்ரபத்யே.

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதி
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யநகுலபதோவகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா

பூதம்ஸரச்சமஹதாஹ்வயபட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலசேகரயோகிவாஹான்
பக்தாங்க்ரிரேணுபரகாலயதீந்த்ரமிச்ரான்
ஸ்ரீமத்பராங்குசமுனிம்ப்ரணதோஸ்மிநித்யம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# தனியன்.

குருமுகமத்தீத்யப்ராஹவேதாநசேஷாந்
நரபதிபரிக்லிப்தம்சுல்கமாதத்துகாம்
சுவசுரமமரவந்தயமாங்கநாதகயயசாக்ஷாத்
த்விஜகுலதிலகந்தம்விஷ்ணுசித்தம்நவாமி.

## நேரிசைவெண்பா.

மின்னார்தடமதில்சூழ் வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார்கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைந்தோம் கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான்வந்தானென்
றீண்டியசங்கமெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதி விரைந்துகிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

பெரியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீராமஜெயம்.

# திருநாமப்பதிகம்.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆதிபரஞ் சோதியா யண்டபகிரண்டமா யநாதியாய்நின்றநாமம், அடிமுடியி லடுவாகி வெளியவன்களிகூரவன்புவைத் திருந்தநாமம், நீதிநெறியாகவே மணிபூரகந்தனி நிலையாகநின்றநாமம், நேசமுடனேசருட வாகனமீதேறியே நின்றுவிளையாடும்நாமம், வீதிவெளியாகவே யுச்சிமலைமீதினில் விளக்கொளியினின்றநாமம், மேலாம்பதத்தையு நாலாப்பதத்தையும் விளங்கக்கொடுக்குநாமம், நாதாந்தபேரொளிய தாகவேவிளங்கிடு நமோநமோவென்றநாமம். நாராயணாஹரி கோவிந்தாவென்று தினநாடிவருந் திருநாமமே. (க)

அரிநமோவென்றரைப் போர்க்குமே பாண்டியர்க்கருவாகிநின்றநாமம். அர்ச்சுனர்க்காகவே கதிரினைமறைத்துநல் லரசுநிலைவைத்தநாமம், பரிவானகிருஷ்ணவதாரத்திற்பூதகி பருத்தமுலை யுண்டநாமம், பாரினிற்கல்வினை மிதித்துப் பெண்ணாகவே பண்பருள் புரிந்தநாமம், திருமேவுபிரகலா தன்றனக்கந்நர சிங்கமுக மானநாமம், தேவாதிதேவரை யிடுக்கண்வைத்தோர்களைத்திறைகொண்டிருந்தநாமம், கருவாகியுருவாகி திருவாகி மருவாகிக்காட்சிதந்திட்டநாமம், கரியீசபிரகாச திருநேசபரவாசகருணைதருந் திருநாமமே. (உ)

முன்னாளிலேசிவன் றிருக்கையிற் பாணமாய் முப்புரமெரித்தநாமம், முதலைவாய்ச் சிக்கியே மதகரிக்கந்நாளின் மூலமாய் நின்றநாமம், பொன்னானருக்மணி தேவி கலியாணத்திற் போராய்த் துலைத்தநாமம், பூதப்பசாசு பில்லிசூனியமுதல் யாவுமே பொய்யாக்கி விட்டநாமம், சின்னபின்னங்களா லிராவணன்சிரசினைத் திடமுடனரிந்தநாமம், சிரஞ்சீவியாகவே விபீஷணன்றனக்குமே ஜெயப்பட்டமீந்தநாமம், கன்னிவயதாகவே கருணாசமுத்திரத்திற் காட்சிதந்தருளும்நாமம், கரியீசபிரகாச திருநேசபரவாச கருணைதருந் திருநாமமே. (௫)

எண்ணிரண்டாயிர மிடையர்கம்மாதருக்கிறையாயிருந்தநாமம், இகலோகபரலோக சொர்க்கலோகமுழுதலோகமாய்நின்றநாமம், மண்ணுக்கும் விண்ணுக்கு மொன்றுனமாவலியை வன்சிறையில் வைத்தநாமம், மராமரவமருகணேயி லுருவவேதொட்டன்று வாலியைவதைத்தநாமம், லுன்றிற்குமைந்திற்கு முண்மையதுவேயாகவுந்தியிலுதித்தநாமம், ஓம்நமோநாராயணாபரந்தாமாவென வேதவேநின்றநாமம், கண்ணுக்கு நாசிக்கு நடுவாகவேநின்று காட்சியேதந்தநாமம், கரியீசபிரகாச திருநேசபரவாச கருணைதருந் திருநாமமே. (௬)

சிலைதனைவளைத்தபின் சனகனன்மகளான சீதையை மணந்தநாமம், திருவரங்கேசனாய்க் காவேரிவாசராய்த் திருச்சனனமானநாமம், கலைபினையுரிந்திட்ட பாண்டவர்கள்மனைவிக்குங் கருணைதந்திட்டநாமம், காலிகடிரண்டிடக கானகந்தன்னிலே காவலாய்நின்றநாமம், மலைதனைச் சுமந்தன்று கோக்களினமாளாமல் வருணனைத்தடுத்தநாமம், மாரீசன்பின்னே திரிந்துமிருகூராகமானையேயெய்தநாமம், நிலையாதசூரனை வராகவவதாரமாய் நின்றன்று கொன்றநாமம், நீலமேகத்தைநிகர் காயாம்பூவண்ணனெனு நெடியவன்றிருநாமமே (௫)

சாலோகசாமீப சாரூபமாகவே சாயுச்சியமான நாமம், சகலகலைவேதப் புராணங்களுக்கெலாந் தயாபரமதானநாமம், பூலோகவுபலோக பாதாளமீதிலே புண்ணியமளித்தநாமம், புவனமதுதன்னிலே நாலாறதென்னவே புராணகலையானநாமம், ஆலோலமாகவே யண்டங்களாயிரத் தெட்டாயளந்தநாமம், அங்குளோ ரிங்குளோராகவேயாவர்க்குமறிவிக்கவந்தநாமம், பரலோகமாகவே பன்னகாசயனத்திற் பள்ளிகொண்டிட்டநாமம், பரவாசகுருயீச திருநேசபிரகாச பகவனது திருநாமமே. (௬)

சுழியானமுனையிலே சூட்சாதிசூட்சமாய் சொல்லி யேநின்றநாமம், சொல்காவியங்களுக் குபசாரமாகவே சொல்லிக்கவந்தநாமம், வெளியானவெளியிலே மேலான வீட்டிலே மீதங்கிருந்தநாமம், வித்தாரமாகவே யுத்தார மோகவே வித்தாரமானநாமம், ஒழியாததேக மெடுத்தா லுமுன்செய லுதவியாய் நின்றநாமம், உள்ளூற்றசோதி யாய் வெள்ளூற்றகாதலா யுள்ளத்தி னின்றநாமம், அழி யாதபதவியை யிங்கெனையெந்நாளு நன்மைகொண் டிட் டநாமம், ஹரிநமோநாராயணவென் றுரைப்பவர்க் கரிய பெருந் திருநாமமே. (எ)

தானுந்தன்பாதமுஞ் சேத்துமம்வருகாலத் தற்கா த்தருள் செய்தநாமம், சந்திரன்செல்வாழ்வு தொலையாத பாக்கியஞ் சார்ந்திரட்சிக்கும்நாமம், தேனந்தமாகவே திருநாமபோதந் தெரிசிக்கவந்தநாமம், திருவவதாரமாய் தாசானுதாசனாய் ஜெகதலம் பரவும்நாமம், ஆனந்தமாக வே ஓங்காரவடிவமா யுள்ளுருகிநின்றநாமம், உல்லாச மாகவே மூவகைத்தோத்திரமு மூவிராகிநின்றநாமம், ஆனந்தமாகவே யணுவுக்குமணுவாகி யசைவற்றிருந்த நாமம், ஹரிநமோநாராய ணவென்றுரைப்பவர்க் கரிய பெருந் திருநாமமே. (அ)

செய்யாதபாவங்கள் செய்தாலும்நீக்கிடும் ஸ்ரீராம வென்றநாமம், தீராதவல்பிணிகள் மாறாததுன்பங்கள் தீர்த்திரட்சிக்குநாமம், பொய்யானகாமப் பெருங்கடல் வீழ்த்தாது புன்பிறவிதீர்க்குநாமம், புண்டரீகடாட்சனை க் கண்டுசேவிக்கவே புன்முறுவல் செய்யும்நாமம், மெய் யானகிருபைகரு வைகுந்தவாழ்வினை விரும்பளிக்குநாம ம், மெய்ஞ்ஞானவழிதந்தே யஞ்ஞானம்நீக்கியே மேன் மைதனை யீயுநாமம், ஊனபாமலேதினமும் நம்பினோனென் றவரை நாடிரட்சிக்குநாமம், நாராயணாஹரி கோவிந்தா வென்று நாடிவருந்திருநாமமே. (கூ)

ஸ்ரீங்காரமாகவே மூற்றெண்டிருப்பதி சிறந்தோங் கிநின்றநாமம், தினந்தினமிரமாவென் றுரைப்பவர்கள் சிந்தையுட் சிறப்புற்றிருக்குநாமம், ரீங்காம லென்னுரு மதிகதிர்விளக்கமாய் நிறம்பியே நின்றநாமம், நிசநித்திய மானதொருபாசத்தியவாசமாய் நிறைவுற்றிருந்தநாமம், பாங்கானபேருடன் வாங்காமலேதினம் பணிபினைக்கொ ண்டநாமம், பச்சைமாலச்சுதா னந்தகோவிந்த னெனப் பரவுதற்கரியநாமம், அங்காரமாகவே திருநாமமாலையில் அன்புவைத் திருந்தநாமம், ஹரிநமோ நாராயணாவென் றுரைப்பவர்க்கரியபெருந் திருநாமமே. (கo)

திருநாமப்பதிகம் முற்றிற்று.

---